## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 145 / 2023

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW24<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Chandrasekaran (I.O.) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 17th day of February, 2026.

**(A1 to A6 are present)**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 12.40 மணி

நான் தாம்பரம் காவல் ஆணையகரத்தில் உதவி ஆணையாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். 07-08-2022 அன்று SRMC காவல் நிலையத்தில் சட்டம்ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது

திருமதி. கமலா என்பவர் கொடுத்த புகாரை பெற்று வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். T15 SRMC காவல் நிலைய குற்ற எண் 453/2022 சட்டப்பிரிவுகள் 342, 323, 395, 376D, 366, 376(1), 506(i) of IPC ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் கமலா, பழனி, இளங்கோ, சுரேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் சிலம்பரசன், முகமது இம்ரான்கான் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் இரண்டு மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.4 மற்றும் அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பவயிடம் குறித்து வரையப்பட்ட மாதிரி வரைபடம், மற்றொன்று ரேஷன் கடை அருகிலுள்ள சம்பவயிடம் குறித்து வரையப்பட்டது. சம்பவயிடம் குறித்து வரையப்பட்ட மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ரேஷன் கடை அருகிலுள்ள சம்பவயிடம் குறித்து வரையப்பட்ட மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் பாதிக்கப்பட்ட நபர் கமலா என்பவரை அங்காளஈஸ்வரி என்ற பெண் காவலருடன் முதல் சிகிச்சைக்காக SRMC மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மேலும் இவ்வழக்கில் எதிரி சந்தோஷ்குமார் என்பவரை கைது செய்து சாட்சிகள் உலகநாதன், சாகுல் அமிது ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்கும் பதிவு செய்தேன். மேலும் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இவ்வழக்கின் சொத்தான மாட்டலை எடுத்த ஆஜர் செய்தார். அதை சாட்சி வசந்தி முன்னிலையில் கைப்பற்றி படிவம் 91 மூலம் நீதித்துறை நடுவர் எண் 1 பூந்தமல்லி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். எதிரி சந்தோஷ்குமாரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது அறுந்த நிலையிலுள்ள வெள்ளி கொலுசு –1 எண்ணிக்கை, சுமார் 5 கிராம் எடையுள்ள தங்க மாட்டல் –1 எண்ணிக்கை நீதிமன்றத்தில் காட்டப்படுகிறது. மேற்படி அறுந்த நிலையிலுள்ள வெள்ளி கொலுசு –1 எண்ணிக்கை **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சுமார் 5 கிராம் எடையுள்ள

தங்க மாட்டல் –1 எண்ணிக்கை **அ.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி பொருட்களுக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்படவில்லை என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை செய்து ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). இவ்வழக்கின் எதிரி சந்தோஷ்குமார் என்பவரை விசாரித்து 07–08–2022 அன்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேலும் இவ்வழக்கில் எதிரிகள் பற்றி தகவல் கிடைத்து 09–08–2022 அன்று இவ்வழக்கின் எதிரிகள் சூர்யா (எ) சூர்யகுமார், கருப்பையா, தினேஷ், கணேஷ், சுபாஷ் ஆகியோரை குமணன்சாவடி பஸ் ஸ்டாப் அருகில் கைது செய்தேன். மேலும் சாட்சிகள் உலகநாதன் மற்றும் சாகுல் அமிது முன்னிலையில் சூர்யா என்பவரின் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். அவர் தனது வாக்குமூலத்தில் தான் இவ்வழக்கின் சொத்துக்களை சம்பவயிடமான அவர் வீட்டிலிருந்து கமலாவின் 4 கிராம் தங்க மோதிரம் மற்றும் எதிரி சூர்யா சம்பவத்தன்று அணிந்திருந்த நீல நிற அரைக்கால் பேண்ட், கருப்பு நிற டி சர்ட் மற்றும் கத்தி – 1 எண்ணிக்கை எடுத்து ஆஜர் செய்ததை கைபற்றுதல் மகஜர் மூலமாக அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். எதிரி சூர்யா (எ) சூர்யபிரகாஷின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 4 கிராம் தங்க மோதிரம், நீல நிற அரைக்கால் பேண்ட், கருப்பு நிற டி சர்ட் மற்றும் கத்தி – 1 எண்ணிக்கை ஆகியவற்றை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பொருட்களை 4 கிராம் தங்க மோதிரம், நீல நிற அரைக்கால் பேண்ட், கருப்பு நிற டி சர்ட் மற்றும் கத்தி – 1 எண்ணிக்கை ஆகியவற்றிற்கான படிவம் 91 **அ.த.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கைப்பற்ற பொருட்கள் தற்போது இந்நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுகிறது. 4 கிராம் தங்க மோதிரம் **அ.சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி சூர்யாவின் நீல நிற அரைக்கால் பேண்ட் **அ.சா.பொ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கருப்பு நிற டி சர்ட் **அ.சா.பொ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கத்தி–1 எண்ணிக்கை **அ.சா.பொ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் எதிரி தினேஷ் என்பவரை அதே சாட்சிகள் உலகநாதன்,

சாகுல் அமிது முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். அவர் சம்பவத்தன்று உபயோகப்படுத்திய Indica Car TN 25 BY 0976 என்ற வாகனத்தை அவர் குமணன் சாவடி பஸ் ஸ்டாப் அருகில் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். மேலும் அவரிடமிருந்து ரூபாய் 1,100/– கைப்பற்றினேன். எதிரி தினேஷின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.26** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் கார் மற்றும் பணத்தை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.27** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் எதிரி தினேஷ் சம்பவத்தன்று அணிந்திருந்த 1. கருப்பு நிற பேண்ட்–1, 2. நீல நிற கட்டம்போட்ட சட்டை–1, 3. சாம்பல நிற ஜட்டி–1 ஆகியவற்றை கைபற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். மேற்படி பொருட்களை மதுரம் நகர் அன்னை அபிராமி நகர் முதல் தெரு, எண். 4/424 வீட்டிலிருந்து கைப்பற்றினேன். மேற்படி எதிரி தினேஷ் அணிந்திருந்த உடைகளை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.28** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கார் மற்றும் பணம் கைப்பற்றியதற்கான படிவம் 91 **அ.த.சா.ஆ.29** ஆக குறியீடு செய்யப்படுகிறது. Indica Car TN 25 BY 0976 என்ற காரின் புகைப்படம் (2 எண்ணிக்கைகள்) மற்றும் குறுந்தகடு **அ.த.சா.ஆ.30** வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ரூபாய் 1,100/– டெபாசிட் செய்ததற்கான இ–செலான் **அ.த.சா.ஆ.31** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கருப்பு நிற பேண்ட்–1 **அ.சா.பொ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீல நிற கட்டம்போட்ட சட்டை–1 **அ.சா.பொ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாம்பல நிற ஜட்டி–1 **அ.சா.பொ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி எதிரி தினேஷ் அணிந்திருந்த உடைகளை கைப்பற்றியதற்கான படிவம் 91 **அ.த.சா.ஆ.32** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் எதிரி சுபாஷ் என்பவரை அதே சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அவர் தனது வாக்குமூலத்தில் சம்பவ நாளன்று தான் அணிந்திருந்த நீல நிற டி சர்ட்–1, இளஞ்சிவப்பு அரைக்கால் டிரவுசர்–1, மஞ்சள் நிற ஜட்டி–1, ஆகியவற்றை நெ. 13/2039, தனலட்சுமி நகர், பெரியகொளுத்துவான் சேரி என்ற முகவரியில் உள்ள அவர் வீட்டிலிருந்து

கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. எதிரி சுபாஷின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.33** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி சுபாஷின் உடைகளை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.34** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான படிவம் 91 **அ.த.சா.ஆ.35** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீல நிற டி சர்ட்–1 **அ.சா.பொ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இளஞ்சிவப்பு அரைக்கால் டிரவுசர்–1 **அ.சா.பொ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மஞ்சள் நிற ஜட்டி–1 **அ.சா.பொ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் எதிரி கருப்பையா என்பவரை அதே சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் தனது வாக்குமூலத்தில் சம்பவத்தன்ற அவர் அணிந்திருந்த இளம்பச்சை நிற வெள்ளை நிற கட்டம்போட்ட சட்டை–1, சாம்பல் நிற பேண்ட்–1, பச்சை நிற ஜட்டி–1, 2.75 அடி நீளம் கொண்ட இரும்பு ராடு ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். எதிரி கருப்பையா ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.36** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி கருப்பையாவின் உடைகள் மற்றும இரும்பு ராடு கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.37** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான படிவம் 91 **அ.த.சா.ஆ.38** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இளம்பச்சை நிற வெள்ளை நிற கட்டம்போட்ட சட்டை–1 **அ.சா.பொ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாம்பல் நிற பேண்ட்–1 **அ.சா.பொ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பச்சை நிற ஜட்டி–1 **அ.சா.பொ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2.75 அடி நீளம் கொண்ட இரும்பு ராடு **அ.சா.பொ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் எதிரி கணேஷ் என்பவரை அதே சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் அவர் தனது வாக்குமூலத்திலும் சம்பவத்தன்று அணிந்திருந்த ஆடைகள் நீல நிற பூ போட்ட சட்டை–1, இளம் பச்சை நிற Track பேண்ட்–1, சிவப்பு நிற ஜட்டி–1 ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். எதிரி கணேஷ் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.39** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி கணேஷ் உடைகள்

கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.40** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான படிவம் 91 **அ.த.சா.ஆ.41** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி கணேஷ் உடைகளான நீல நிற பூ போட்ட சட்டை–1 **அ.சா.பொ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இளம் பச்சை நிற Track பேண்ட்–1 **அ.சா.பொ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிவப்பு நிற ஜட்டி–1 **அ.சா.பொ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கின் சொத்தான மாட்டல் 4 கிராம் காவலர்கள் ரகுராமன் மற்றும் பொன்னுசாமி ஆகியோர் சம்பவயிடத்திலிருந்து வந்து ஆஜர் செய்ததை கைப்பற்றினேன். மேலும் இவ்வழக்கின் எதிரி சந்தோஷ்குமாரிடமிருந்து கைப்பற்றிய செல்போன் **அ.சா.பொ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கின் எதிரி சந்தோஷ்குமாரிடமிருந்து கைப்பற்றிய ஆடைகள் பச்சை நிற முழுக்கை டி சர்ட் –1 **அ.சா.பொ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது., கருப்பு நிற பேண்ட்–1 **அ.சா.பொ.22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி பொருட்களுக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்படவில்லை என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை செய்து ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). தங்க மாட்டல் – 1 எண்ணிக்கை, அறுந்த நிலையில் உள்ள கொலுசு –1 எண்ணிக்கை, செல்போன்–1 எதிரி சந்தோஷ் அணிந்திருந்த உடைகள் ஆகியவற்றை கைப்பற்றிய படிவம் 91 **அ.த.சா.ஆ.42** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணிடமிருந்து சம்பவத்தின்போது அவர் அணிந்திருந்த பிரவுண் மற்றும் வெளிர்பச்சை நிறத்தில் கட்டம்போட்ட புடவை மற்றும் பச்சை நிற பாவாடை, வெந்தைய நிற ஜாக்கெட் ஆகியவற்றை கைப்பற்றினேன். பிரவுன் மற்றும் வெளிர்பச்சை நிறத்தில் கட்டம்போட்ட புடவை **அ.சா.பொ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பச்சை நிற பாவாடை **அ.சா.பொ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வெந்தைய நிற ஜாக்கெட் **அ.சா.பொ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி பொருட்களுக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்படவில்லை என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை செய்து ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி பாதிக்கப்பட்ட

பெண்ணின் உடைகளை கைப்பற்றியதற்கான படிவம் 91 **அ.த.சா.ஆ.43** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட கமலா அவர்கள் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர் என்று தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை மாற்றம் செய்ய உயர் அதிகாரிகளிடம் அனுமதிபெற்று இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 342, 323, 395, 376D, 366, 376(1), 506(i) of IPC ல் இருந்து சட்டப்பரிவுகள் 342, 323, 395, 376D, 366, 376(1), 506(i) of IPC ன் and Sec. 3(2)(v) of SC/ST Act r/w 34 IPC ஆக மாற்றம் செய்து பிரிவு மாற்றல் அறிக்கை தயார் செய்தேன். சட்டப்பரிவு மாற்றல் அறிக்கையை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பிரிவு மாற்றல் அறிக்கை **அ.த.சா.ஆ.44** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கு SC/ST வன்கொடுமை வழக்கு என்பதால் இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரியை நியமிக்க ஆவடி D.C. யிடம் அறிக்கை சமர்பித்தேன். இந்த வழக்கில் சாட்சிகள் சொன்னபடி தான் பதிவு செய்தேன். A.C. என்னை விசாரித்தார்.

**வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்க விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.